# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஏ.பெரியசாமி**
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**கோ.பழனியம்மாள்**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

மாநிலச் செயலாளர்கள்
**சி.ஆர்.இராஜகுமார்**
**இரா.ந.நம்பிராஜன்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**உ.சண்முகம்**
**தெ.வாசுகி**


# தருமபுரியில் 2020 டிசம்பர் 20 அன்று நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்

# மாநில பிரதிநிதித்துவப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட கோரிக்கை தீர்மானங்கள்

## இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பறிக்கும் ஆதிசேஷைய்யா தலைமையிலான பணியாளர் சீரமைப்பு குழுவின் பரிந்துரையை ரத்து செய்திட வேண்டும்

தமிழகத்தில் அரசுத் துறைகளில் நான்கரை இலட்சத்திற்கும் மேற்பட்டக்காலிப் பணியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ளன. பட்டப் படிப்பு மற்றும் உயர் படிப்பு படித்துவிட்டு, 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றி தவித்துக் கொண்டுள்ளனர். வேலைவாய்ப்பின்மை என்பது அந்தந்த இளைஞனின் தனிப்பட்ட பிரச்சனை அல்ல. இது இந்திய நாட்டின் மிகப்பெரிய சமூக பிரச்சனையாக உள்ளது. இந்திய நாட்டில் படித்த இளைஞர்கள் சொந்த நாட்டிலேயே வேலைவாய்ப்புகளை பெற முடியாமல் இருக்கும் நிலையில் உள்ளார்கள்.

தமிழக அரசில் உள்ள வேலைவாய்பினைக்கூட வெளி மாநிலத்தவர் தட்டிப் பறிக்கும் சூழ்நிலை என்பது உருவாகி உள்ளது. ஏற்கனவே பல்வேறு துறைகளில் பதவி உயர்வுகள் என்பது அறவே இல்லாமல் உள்ள சூழ்நிலையில், தமிழக அரசு பிறப்பித்துள்ள ஆதிசேஷைய்யா தலைமையிலான பணியாளர் சீரமைப்பு குழுவினை முற்றிலுமாக தமிழக அரசு ரத்து செய்திட வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமிக்கும்போது எந்தவிதத்திலும் அந்தப் பணியாளர்களிடம் நன்னடத்தையும் கட்டுப்பாட்டையும் பேணுவது என்பது இயலாத காரியம். அதோடு மட்டுமல்லாமல், தனியார் முகமைகள் மூலம் பணியமர்த்தப்படுபவர்கள் பணியில் ஈடுபாட்டுடன் செயல்பட வாய்ப்பில்லை.

எனவே, இளைஞர்களின் வேலைவாய்ப்பினை முற்றிலுமாக பறிக்கக்கூடிய ஆதிசேஷைய்யா தலைமையிலான பணியாளர் சீரமைப்பு குழு வழங்கிய பரிந்துரையினை இரத்து செய்ய வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## அரசுத் துறைகளில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை கைவிட வேண்டும்.

புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ள ஆட்சியாளர்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார்வசம் ஒப்படைப்பதன் மூலம் தங்களுக்கான கடமைகளிலிருந்தும், ஏழை எளிய நடுத்தர மக்களை தாயுள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்திலிருந்தும் விலகிக் கொள்வதோடு அரசாங்க வேலைக்கு ஆள் எடுப்பதில் அறிவிக்கப்படாத தடை, ஓய்வுபெறுதல் மற்றும் பணிக்காலத்திலேயே இறந்து விடுதல் போன்ற காரணங்களினால் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுதல், புதிய பணியிடங்களைத் தோற்றுவிக்காமல் இருப்பது, தேவைப்படும் இடங்களில் தற்காலிகப் பணியாளர்களை அமர்த்துதல் போன்ற பலகட்ட நடவடிக்கைகளால் தமிழக அரசுத் துறைகளில் ஆட்குறைப்பு செய்யப்படுகிறது.

இவ்வாறு செய்வதால் ஏற்படக்கூடிய சமுதாயப் பிரச்சனைகள் நம்மால் கற்பனை செய்துகூட பார்க்க இயலாது. எனவே, அரசுத் துறைகளில் அவுட்சோர்சிங் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை முற்றிலுமாக கைவிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## திரு. மு. சுப்பிரமணியன் பணியிடை நீக்கத்தை இரத்து செய்து முறையாக அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெறக் கோருதல்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில தலைவராகவும் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் சங்கத்தின் மாநில தலைவராகவும் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளராகவும் பொறுப்பில் இருந்த திரு. மு.சுப்பிரமணியன் அவர்கள் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை) பதவியிலிருந்து 31.05.2019 அன்று வயது முதிர்வின் காரணமாக அரசுப் பணியிலிருந்து ஓய்வுபெற இருந்த நிலையில், 31.05.2019 பிற்பகல் தற்காலிகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி ஊராட்சி ஒன்றியம், மாந்தோப்பு கிராம ஊராட்சியில் கடந்த 2011-12ஆம் ஆண்டு தொகுப்பு வீடு பயனாளர்கள் தேர்வு தொடர்பாக அப்போது துணை வட்டார வளர்ச்சி (ஆதி திராவிடர் நலம்) அலுவலராகப் பணியாற்றிய திரு. மு. சுப்பிரமணியன் அவர்களின் மீது 17(பி) குற்றக் குறிப்பாணையானது விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரால் 13.-08-2015 அன்று வழங்கப்பட்டது.

விருதுநகர் மாவட்டத்தில் 2011-12ஆம் ஆண்டு தொகுப்பு வீடு பயனாளர்கள் தேர்வு தொடர்பான நேர்வில் பொறியாளரையும், மேற்பார்வையாளரையும் குற்றச்சாட்டிலிருந்து விடுவித்ததோடு மட்டுமன்றி, இந்தேர்வில் தொடர்புடைய வட்டார வளர்ச்சி அலுவலர், உதவி இயக்குநராக பதவி

உயர்வும் அளிக்கப்பட்டு, முறையாக அன்னார் அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதி அளித்து அரசாணை வெளியிட்டுள்ளது என்பது திரு. மு.சுப்பிரமணியன் அவர்களது நிகழ்வில் பாரபட்சமான உள்நோக்கத்துடன் இயற்கை நியதிக்கு எதிரான நடவடிக்கையாகும்.

எனவே விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்பட்ட குற்றக் குறிப்பாணையினை இரத்து செய்யக்கோரி திரு. மு.சுப்பிரமணியன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தொடர்ந்த வழக்கில் இவர் மீது சுமத்தப்பட்ட குற்றக் குறிப்பாணை இரத்து செய்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை தீர்ப்பளித்துள்ளது.

திரு. மு. சுப்பிரமணியன் 32 ஆண்டு கால அரசுப் பணியினை நேர்மையான முறையிலும் அப்பழுக்கற்ற முறையிலும் பணியாற்றியதோடு தனது அரசு பணி காலத்தில் ஊழியர் நலனுக்காக முன்னின்று பணியாற்றியவர்.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் தீர்ப்பினை அமுல்படுத்தும் வகையில் திரு.மு.சுப்பிரமணியன் அவர்களின் மீதான குற்றக் குறிப்பாணையினை இரத்து செய்து, அன்னாரின் தற்காலிகப் பணி நீக்க உத்தரவினைத் திரும்பப் பெற்று, அன்னார் முறையாக 31.05.2019 அன்று அரசுப் பணிலிருந்து ஓய்வு பெற அனுமதித்து, அதன் மூலம் கிடைக்க வேண்டிய ஓய்வூதிய பலன்களை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தை (IFHRMS) கைவிட வேண்டும்

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தில் கூறப்பட்டுள்ள மனிதவள மேலாண்மை என்பது அரசுப் பணியிடங்களைக் காலியாக்கி முற்றாக ஒழித்துக்கட்டி, அவற்றை தனியார்வசம் ஒப்படைத்து விடும் ஒரு முயற்சியாகவே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கருதுகிறது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவது என்ற போர்வையில், அரசின் வரவு-செலவு, ஊழியர் தொடர்பான தனிநபர் தரவுகள், அரசின் நிதிக் கட்டுப்பாடு போன்ற புள்ளிவிவரங்களை தனியார்வசம் ஒப்படைப்பது என்பது தமிழக அரசு மக்கள் நலனுக்கும், ஊழியர் நலனுக்கும் எதிராக செயல்படும் போக்கினையே வெளிப்படுத்துகிறது.

இந்தத் திட்டத்தினை செயல்படுத்துவதில் தமிழக அரசு ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சொல்லில் அடங்கா. எனவே, தமிழக அரசின் புள்ளிவிவரங்களை முற்றிலுமாக தனியார்வசம் ஒப்படைக்கும் இந்த ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்தினை கைவிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com


## தமிழக அரசுத் துறைகளிலுள்ள நாலரை இலட்சம் காலிப் பணியிடங்களை உடனே நிரப்பிட வேண்டும்

*இலட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துவிட்டு, அரசு வேலைக்காக காத்துக்கிடக்கின்றனர். நவம்பர் 2020 நிலவரப்படி தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து அரசுப் பணிக்காக 67 இலட்சம் இளைஞர்கள் காத்திருப்பதாக அரசின் புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. இளைஞர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியை ஏற்றும் வகையில், தமிழக அரசுத் துறைகளில் காலியாகவுள்ள நாலரை இலட்சம் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## சத்துணவு மற்றும் அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், எம்ஆர்பி செவிலியர்கள் உள்ளிட்ட காலமுறை ஊதியம், தொகுப்பூதியம் பெறும் மூன்றரை இலட்சம் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும்.

*தமிழக அரசுத் துறைகளில் காலிப் பணியிடங்கள் நிரப்பப் படாமல் விடுபட்டுள்ள நிலை ஒருபுறமிருக்க, படித்துவிட்டு வேலைவாய்ப்புக்காக அலைந்து கொண்டிருக்கும் இளைஞர்களையும் பெண்களையும் மிகக் குறைந்த ஊதியத்தில், கூலிக்கு வேலைக்கு அமர்த்துவதைப் போல் அமர்த்தி, அவர்களின் உழைப்பினை சுரண்டும் நடவடிக்கை என்பது வெகு காலமாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

*இத்தகைய கொத்தடிமை கூலி முறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், வேளாண்மைத் துறையில் பணிபுரியும் பண்ணை ஊழியர்கள் போன்ற பல்வேறு நிலைகளில் பணியமர்த்தப்படுகின்றனர். இவர்களுடன் தற்போது தொகுப்பூதியத்தில் எம்ஆர்பி செவிலியர்களும் பணியமர்த்தப்படும் அவலமும் தொடர்ந்து அரங்கேறி வருகிறது. இவ்வாறு பணியமர்த்தப்படும் அனைத்து நிலை ஊழியர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## 2002ல் பணி நீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்களின் பணநீக்க காலமான 41 மாத காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்தி அறிவித்திடுக.

*எந்தவித காரணமுமின்றி பணிநீக்கம் செய்யப்பட்ட சாலைப் பணியாளர்கள் கடுமையான போராட்டங்களின் காரணமாகவும் நீதிமன்ற உத்தரவின் மூலமாகவும் 41 மாத கால பணி நீக்கத்திற்கு பிறகு பணியமர்த்தப்பட்டனர். சமூகத்தின் அடித்தட்டு பகுதியிலிருந்து சாலைப் பணியாளர்களாக பணியமர்வு செய்யப்பட்ட இவர்கள் பணி நீக்கக் காலத்தில் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி, பல்வேறு இடங்களில் கடன் பெற்று குடும்பத்தை நடத்தினர். எனவே இவர்களது பணி நீக்கக் காலமான 41 மாத காலத்தை பணிக்காலமாக முறைப்படுத்தி அறிவித்திட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சி ஊழியர்களை அரசு ஊழியர்களாக்க வலியுறுத்தல்

*நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியத்தை உத்திரவாதப்படுத்திடும் வகையில் அரசு கருவூலத்தின் மூலம் ஊதியம் வழங்கப்பட வேண்டும் எனவும், ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளதைப் போல் அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்து அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## வேலை நிறுத்தக் காலத்தை பணிக்காலமாக அறிவிக்கக் கோருதல்

*தமிழக அரசு சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசி கோரிக்கைகளை தீர்க்க முன்வராத நிலையில் 2016 பிப்ரவரி 10 முதல் 19 வரை காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அப்போதைய முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் 110 விதியின் கீழ் 11 அறிவிப்புகளை வெளியிட்டதன் காரணமாக நல்லெண்ண அடிப்படையில் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. மேற்காணும் வேலை நிறுத்த நாட்களையும், அதேபோன்று சென்ற ஆண்டு 22.01.2020 முதல் 30.01.2020 வரை நடத்திய வேலை நிறுத்த காலத்தையும் பணிக்காலமாக அறிவிக்குமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## பெண் அரசு ஊழியர்களுக்கு காப்பீட்டு தொகை முழுமையாக பெற்றுத் தர கோருவது

*தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்போது கணிசமான அளவு பெண்கள் பணியாற்றுகின்றனர். அனைத்து துறைகளிலும் நிலவும் காலிப்பணியிடங்களாலும் அதன் மூலம் கூடுதல் பணி சுமையாலும் குடும்பத்தை நிர்வகிக்கும் தலையாய கடமைகளிலும் பெண் அரசு ஊழியர்களுக்கு தனதுஉடல் நலனை பேணுவதில் கால அவகாசம் இன்றி அலுவலக பணிகளை மேற்கொண்டு "துறையின் வளர்ச்சியில்தான் ஊழியர்களின் வளர்ச்சியும்" உள்ளது என்று கூடுதல் சிரத்தையோடு பணியாற்றுகின்றனர்.*

*சமீப காலங்களாக பெண்களை அதிகமாக தாக்குகின்ற கருப்பைவாய் மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறிய தங்களது உடல் நலனை பரிசோதித்து கொள்ள நேரத்தை ஒதுக்காத சூழல் உள்ளதை களைந்திடும் வகையில் அரசு துறைகளில் பணிபுரியும் பெண் அரசு ஊழியர்களுக்கு மாவட்டங்கள் தோறும் ஆண்டிற்கு ஒரு முறையாவது "கர்ப்பப்பை வாய் பரிசோதனை" மற்றும் "மார்பக புற்று நோய் பரிசோதனை" முகாம்களை தமிழக அரசே நடத்திட வேண்டும். சிகிச்சை உள்ளிட்டு "ஹீமோதெரப்பி" நோய் அறிதல் மற்றும் சிறப்பு சிகிச்சைகள் முழுமைக்கும் பின்னேற்ப்பு பண அனுமதியினால் பல ஆண்டுகள் காத்திருப்பதன் மூலம் மிகுந்த மன உளைச்சலை தவிர்த்திடும் வகையில் மருத்துவ காப்பீட்டின் மூலம் தமிழக அரசே முழு செலவையும் ஈடு செய்ய வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com


## பெண் ஊழியர்களுக்கான சிறப்புச் சலுகைகளை அளித்திட கேட்டல்

1. அலுவலகங்களில் தனி ஓய்வறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்பட வேண்டும். அதேபோல் மாற்று திறனாளிகளாக இருக்கும் அரசு ஊழியர்கள் அனைவருக்கும் செய்து தரவேண்டும்.

2. கணவன், மனைவி இருவரும் ஒரே ஊரில் பணிபுரிய வகை செய்யும் ஆணையினை கண்டிப்பாக்கும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

3. குடும்ப வாழ்க்கையும் குழந்தைகளின் கல்வியும் பாதிக்கும் விதத்தில் இடமாற்றம் செய்யக்கூடாது.

4. மாவட்டந்தோறும் பெண் ஊழியர்களுக்கு விடுதிகள் கட்டப்பட வேண்டும். அரசு அலுவலக வளாகங்களில் குழந்தைகள் காப்பகமும் அமைக்கப்பட வேண்டும்.

5. உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக் கெதிரான பாலியல் துன்புறுத்தல்களை விசாரிக்க புகார் கமிட்டி அமைத்து நடைமுறைப்படுத்திட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## தமிழ்நாடு எம்ஆர்பி செவிலியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வேண்டும்

தமிழகத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தேர்வாணையத்தால் எம்ஆர்பி நடத்தப்பட்ட தேர்வுகளில் கலந்து கொண்டு தேர்வு எழுதி தேர்ச்சி பெற்று 2015 ஆம் ஆண்டு சுமார் 9000 செவிலியர்கள் தமிழகம் முழுவதும் ரூபாய் 7,700/-தொகுப்பூதிய அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டனர். இவர்களது நியமன ஆணைகளில் இரண்டு ஆண்டுகள் முடிந்த பின்னர் படிப்படியாக முறையான ஊதிய விகிதங்களில் பணி அமர்த்தப்படுவார்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் நியமன ஆணையில் குறிப்பிட்டுள்ளது போன்று பணிவரன்முறை செய்யப்படாததால் 2017ஆம் ஆண்டு நவம்பர் 27ம் தேதி முதல் சென்னை டிஎம்எஸ் வளாகத்தில் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டபோது சென்னை உயர்நீதிமன்றத்தில் மூன்றாம் நபராக வெளியாள் ஒருவர் தொடர்ந்த பொதுநல வழக்கை முடித்து வைத்த உயர்நீதிமன்றம் இவர்கள் பெற்று வந்த தொகுப்பூதியம் ரூ. 7,700ஐ ரூ.14,000ஆக உயர்த்தி வழங்கப்பட வேண்டும் என தீர்ப்பளித்தது. அதன் அடிப்படையில் தற்போது ரூ. 14,000 மற்றும் வருடாந்திர உயர்வாக ரூபாய் 500 ஆண்டு ஒன்றுக்கு பெற்று வருகின்றனர்.

மேலும் சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்படவேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் ஏற்கெனவே நியமன உத்தரவில் முறையான வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையிலும் பிற அரசு செவிலியர்களை போன்று வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்குவது குறித்தான சாத்தியக்கூறுகளை பரிசீலிக்க சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசு செயலாளர் தலைமையில் 2018-ல் குழு அமைக்கப்பட்டது. குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்க 6 மாத கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. சுமார் 18 மாதங்கள் ஆன பின்னரும் குழு தனது பரிந்துரைகளை அரசு மற்றும் நீதிமன்றத்தில் அளிக்கவில்லை என்பதுடன் எம்ஆர்பி செவியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்படவில்லை.

*எனவே தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அரசு செயலாளர் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை பெற்று எம்ஆர்பி செவிலியர்களுக்கு நியமன நாள் முதல் வரையறுக்கப்பட்ட காலமுறை ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து பழைய பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோருதல்

*போராடும் பொதுமக்களை தீவிரவாதிகளாய் நினைத்து தீர்த்துக் கட்டுவதும், முற்றுகைப் போராட்டம் நடத்தும் ஊழியர்களை முள்வேலி அமைத்து நையப்புடைப்பதும் இந்த அரசின் கையாலாகாத்தனத்துக்கு சிறந்த உதாரணங்கள். 99 நாட்கள் அமைதியாக போராடியும் அரசாங்கம் கேட்கவில்லை என்பதால் பொதுமக்கள் முற்றுகை போராட்டம் நடத்த முடிவெடுத்தனர். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் விஷயத்திலும் இதுதான் நடந்தது. 19.12.2016 அன்று மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா சட்டப் பேரவையில் விதி எண். 110-ன் கீழ் அறிக்கை வாசித்தார். அதில்,*

*“ஒளிவு மறைவற்ற, திறமைமிக்க, பொறுப்புள்ள நிர்வாகத்தை அளிப்பது நல் அரசின் இலக்கணம் ஆகும். இந்த அடிப்படையிலேயே எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. அரசின் முகமாகவும், மனமாகவும் செயல்படுகிறவர்கள் அரசு அலுவலர்கள்தான். அரசால் தீட்டப்படும் செயல் திட்டங்களும், வகுக்கப்படும் நலத் திட்டங்களும் உரிய முறையில் மக்களைச் சென்றடையச் செய்பவர்கள் அரசு அலுவலர்கள். ஒரு அரசின் செயல்திறன், அரசு அலுவலர்களின் செயல்திறனைப் பொறுத்தே அமையும். அரசின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு அலுவலர்கள். இப்படிப்பட்ட முக்கியம் வாய்ந்த அரசு அலுவலர்களின் நலனில் எப்போதும் தனி அக்கறை கொண்டு எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது”.*

*இந்த அறிக்கையில் 10ஆம் எண்ணிட்ட பத்தியில்,*

*“பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே செயல்படுத்திட வேண்டுமென்று பல்வேறு அரசு அலுவலர் சங்கங்கள் கோரி வருகின்றன. இந்தக் கோரிக்கை குறித்து தீவிரமாக ஆராயப்பட வேண்டும். எனவே, இதுபற்றி ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரைக்க வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்படும். அந்த வல்லுநர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தக்க முடிவு எடுக்கப்படும்”*

*என்றார். இந்த அறிக்கைக்கூட முதல்வர் ஜெயலலிதா தன்னிச்சையாக வெளியிடவில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 2016 பிப்ரவரி மாதத்தில் நடத்திக் கொண்டிருந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தின் அழுத்தத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பாகும் அது.*

*பின்னர் 2016 பிப்ரவரி 19 அன்று அப்போதைய முதல்வர் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் வெளியிட்ட அறிக்கையின் பேரில் 26.2.2016 அன்று அரசாணை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி திருமதி சாந்தா ஷீலா நாயரை வல்லுநர் குழுத் தலைவராக நியமித்து*

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com


அந்தக் குழு புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற்று, பழைய ஓய்வூதியத் திட்டத்தை தொடர்வது குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க நான்கு மாதங்கள் காலவரையறை நிர்ணயிக்கப்பட்டது. திருமதி சாந்தா ஷீலா நாயர் 30.3.2017 அன்று வல்லுநர் குழுத் தலைவர் பதவியை ராஜினாமா செய்ததால் வல்லுநர் குழு செயல்படாமல் முடங்கியது. வேறு யாரையும் நியமிக்காத நிலையில் பலகட்ட போராட்டங்களுக்கு பின்னர் ஜாக்டோ-ஜியோ போராட்டம் அறிவித்ததன் பின்னணியில் 3.8.2017 அன்று டாக்டர் டி.எஸ்.ஸ்ரீதர் ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி நியமிக்கப்பட்டார்.

அரசாணை வெளியிடப்பட்டு 31.3.2018 அன்று முடிந்த நிலையில் வல்லுநர் குழு அறிக்கை தாக்கல் செய்யாத நிலையில் இந்த அரசாங்கம் அரசு ஊழியர்களையும், ஆசிரியர்களையும் ஏமாற்றி வருகிறது. தற்போது ஐஏஎஸ் அதிகாரி சித்திக் தலைமையில் ஒரு நபர் குழு அமைக்கப்பட்டுள்ளது. நாளது வரை குழுவின் காலம் நீடித்துக் கொண்டே செல்கிறதே தவிர அரசு ஊழியர்களுக்கு உரிய உத்தரவாதம் தரப்படவில்லை. தொடர்ந்து போராட்டம் நடத்தியதை காரணம் காட்டி நீதிமன்ற வழக்காக மாறியபின் நீதிமன்றத்தின் கடுமையான உத்தரவின்பேரில் 21 மாத கால நிலுவைத் தொகையை நிறுத்திக் கொண்டு ஊதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. ஊதிய மாற்றத்தை 31.10.2017-க்குள் ஏற்படுத்த வேண்டும் என்று உயர் நீதிமன்ற மதுரை கிளை சொன்ன அதே உத்தரவில்தான் இந்த அரசு 2017 நவம்பர் மாத இறுதிக்குள் வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டு அதன் பேரில் முடிவை மேற்கொள்வதாக நீதிமன்றத்தில் உத்தரவாதமளித்தது.

எனவே, மேலும் காலம் தாழ்த்தாமல் 1.4.2013-க்கு பிறகு பணியில் சேர்ந்த அரசு ஊழியர்கள் அனைவருக்கும் உடனடியாக புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்துவிட்டு பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வர வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## சிறப்பு காலமுறை ஊதியத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வலியுறுத்தல்

கொத்தடிமை கூலி முறையின் கீழ் சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், தோட்டக்கலைத்துறை பண்ணைப் பணியாளர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்துவரக்கூடிய ஊழியர்கள்-ஆசிரியர்களின் உழைப்பு, முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எந்தவித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

2016ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிட்ட சட்டமன்றவிதி 110-ன்கீழ் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவித்திருந்தார். ஆனால், அதற்கு மாறாக அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் ஊழியர்களுக்கு குறைந்தபட்சமாக ரூ.3,000 எனவும், அதிகபட்சம் ரூ.11,000 எனவும் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகுந்த ஏமாற்றத்தை அளிப்பதாக உள்ளது.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
**Tamilnadu Government Employees' Association**

பதிவு எண் 237/84

தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com


எனவே, மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா சட்டமன்றத்தில் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## 21 மாத கால நிலுவைத் தொகை வழங்கிட வலியுறுத்தல்

2014ஆம் ஆண்டில் மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அமைச்சரவையில் நிதியமைச்சராக இருந்த திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், அம்மா முன்னிலையில் சட்டமன்றத்தில் 2014-15ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட உரையை வாசித்தபோது, "2016-17ஆம் ஆண்டு முதல் ஏழாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படும் என கருதப்பட்டுள்ளது. முந்தைய ஊதியக் குழுக்கள் போலன்றி, இக்குழுவின் பரிந்துரைகள் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும், பிந்தைய ஆண்டுகளில் தவணைகளில் நிலுவைத் தொகை வழங்க வேண்டிய சூழ்நிலை எழாது எனவும் கருதப்பட்டுள்ளது" என தெரிவித்திருந்தார்.

தற்போது அம்மா வழியில் செயல்படுவதாக கூறிக்கொள்ளும் மாண்புமிகு தமிழக முதல்வர், 1.1.2016 முதல் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு கிடைக்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையை கருத்தியலாக மட்டும் கணக்கில் எடுத்துக்கொண்டு ஊதிய மாற்றத்தை அமுலாக்கியுள்ளதால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மத்தியில் மிகப்பெரிய ஊதிய இழப்பும், அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. மத்திய அரசு ஊழியர்கள் தங்கள் ஊதிய நிலுவைத் தொகையை 1.1.2016 முதல் ரொக்கமாக பெற்றுள்ள நிலையில், தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்கள் 21 மாத ஊதிய நிலுவைத் தொகையை இழக்க வைத்துள்ள செயல் மிகவும் கண்டனத்திற்குரியது.

அரசின் நலத் திட்டங்களை முழுமையாக மக்களுக்கு கொண்டு சேர்க்கும் அரசின் அச்சாணியாக உள்ள அரசு ஊழியர்களுக்கும், மாணவர்களுக்கு பண்பட்ட கல்வி, கலாச்சார, பண்பாடு, ஒழுக்கம் ஆகியவற்றை போதிக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் 8வது ஊதிய மாற்றத்தில் 1.1.2016 முதல் 30.9.2017 முடிய உள்ள 21 மாதத்திற்கான முடக்கப்பட்ட ஊதிய நிலுவைத் தொகையை உடன் வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியமும், படிகளும் வழங்கக் கோருதல்

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை வழங்கியுள்ளதாக அரசாணையில் குறிப்பிடப்பட்டிருப்பினும், குறைந்தபட்ச ஊதியம் முதல் அனைத்து நிலைகளிலும் ஊதியம், வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி, குறைந்தபட்ச ஓய்வூதியம் போன்ற அனைத்து இனங்களிலும் மத்திய அரசு ஊழியர்கள் பெறுவதைவிட மிகக்குறைவான தொகையை தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், இந்த ஊதிய மாற்றத்திலும் இதுகாறும் பெற்றுவந்த ஊதியச் சமநிலை கூட சீர்குலைக்கப்பட்டிருப்பதும், மத்திய அரசு ஊழியர்கள் பெறும் பல்வேறு சலுகைகளில் சிலவற்றைக்கூட தமிழக அரசு ஊழியர்களுக்கு வழங்காமல் புறக்கணித்துள்ளதும் தொடர்ந்து இழைக்கப்பட்டு வரும் அநீதியாகும். மக்கள் நலனிலும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனிலும் அக்கறை கொண்டுள்ளதாக கூறும் தமிழக அரசு, மத்திய அரசு ஊழியர்களுக்கு

வழங்குவதுபோல் வீட்டு வாடகைப்படி, போக்குவரத்துப்படி, கல்விப்படி உள்ளிட்ட இதர படிகளையும் தமிழக அரசு ஊழியர்களுக்கும் வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## தொழில்நுட்ப ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி களையப்பட வேண்டும்

அரசின் பல்வேறு துறைகளில் பணியாற்றிவரும் தொழில்நுட்ப ஊழியர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதி மற்றும் தொழில்நுட்ப தகுதி ஆகியவற்றின் அடிப்படையில் தற்போதைய ஊதிய விகிதங்களில் PB1 ஏற்ற முறையில் ரூ.5200-20200 ஊதிய விகிதத்தில் ரூ.2800 தர ஊதியத்தில் இவர்களது ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு, அதற்கு இணையான புதிய ஊதியம் நிர்ணயிக்க வேண்டுமென வலியுறுத்திக் கேட்கப்பட்டதை அலுவலர் குழு புறந்தள்ளியது. மேலும், தொழில்நுட்ப ஊழியர்கள் அனைவருக்கும் 10 சதவீத ஆபத்துப்படி (Risk Allowance) வழங்கப்பட வேண்டும் எனவும் வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் உள்ளது. எனவே, இக்குறைகளை களைந்து தொழில்நுட்ப ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதியை களைந்திட வேண்டுமாய் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய மாற்றத்தை ஒழுங்கமைக்கக் கோருதல்

அரசுத் துறைகளில் எந்த ஒரு பணியும் திட்டமிடுவதிலிருந்து செயலாக்கம் வரை அனைத்துப் பணிகளிலும் அமைச்சுப் பணியையே ஆதாரமாகக் கொண்டுள்ளன. அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் இவர்கள் மூலமாகத்தான் மக்களுக்கு சென்றடைகின்றன. ஒவ்வொரு ஊதியமாற்றத்தின்போதும் இவர்களின் ஊதியம் அவர்களின் பணித் தன்மைக்கேற்ப நிர்ணயிக்கப்படவில்லை. கடந்த ஊதிய மாற்றத்தின்போது இவர்களின் ஊதிய நிலை கடுமையாக பாதிக்கப்பட்டது. எனவே, அமைச்சுப் பணியாளர்களின் ஊதியச் சமநிலை பாதுகாக்கக்கூடிய விதத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களாக பணியாற்றும் ஏ மற்றும் பி பிரிவினருக்கு நிறுத்தப்பட்ட கருணைத் தொகையை வழங்கக் கோருதல்

தமிழக அரசு ஆண்டுதோறும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியத்தை அதாவது பொங்கல் கருணைத் தொகையை கடந்த 4 ஆண்டுகளாக 'ஏ' மற்றும் 'பி' பிரிவினருக்கு தமிழக அரசால் வழங்கப்படவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக பெற்று வந்த பொங்கல் கருணைத் தொகை மறுக்கப்பட்டுள்ளதிலிருந்து ஏற்கனவே பெற்றிருந்த உரிமைகளில் ஒன்றை அரசு ஊழியர்களின் பெரும் பகுதியினர் இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது. எந்த அரசும் செய்யாத இதுபோன்ற முடிவை எடுத்துள்ள தமிழக அரசுக்கு கண்டனம் தெரிவிப்பதுடன், உடனடியாக பொங்கல் கருணைத் தொகை வழங்குவதன்மூலம் அரசு தன் ஊழியர்களின் பாரம்பரிய உணர்வுகளுக்கு மதிப்பளித்து இத்தொகையை மீள வழங்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## நாளது வரை சரிசெய்யப்படாமல் இருக்கும் ஊதிய முரண்பாடுகளை சரிசெய்ய வலியுறுத்தல்

ஊதியக்குழு, அலுவலர் குழு, ஒருநபர் குழு என அனைத்து குழுக்களிடமும் சங்கங்கள் வைத்த கோரிக்கைகளில் முதன்மையான கோரிக்கை என்னவென்றால், கடந்த ஊதிய மாற்றத்தினால் எழுந்த முரண்பாடுகளை சரிசெய்த பின்னரே 1.1.2016-க்கான ஊதிய மாற்றத்தை அறிவிக்க வேண்டும் என்பதாகும். இதுகுறித்து அனைத்து சங்க அமைப்புகளும் மாண்புமிகு முதல்வரிடமும், குழுக்களிடமும் முன்வைத்த கோரிக்கைகள் மறுதலிக்கப்பட்டுள்ளன. எனவே, அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய மாற்றத்தை சென்ற ஊதிய மாற்றத்தின்போது ஏற்கப்பட்டு இதுநாள் வரை சரி செய்யப்படாமல் இருக்கும் ஊதிய முரண்பாடுகளை உடனடியாக சரிசெய்து சீர்செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## மத்திய அரசுக்கு இணையாக குறைந்தபட்ச அடிப்படை ஊதியமும், ஓய்வூதியமும் வழங்க வலியுறுத்தல்

மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக தமிழக அரசு ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படும் என தமிழக அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு 1.6.1988 முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தற்போது 1.1.2016 முதல் திருத்தியமைக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் தமிழக அரசு ஊழியர்களுக்கு குறைவான சம்பளம் வழங்கப்படுகிறது. மத்திய அரசு அமைத்த 7வது ஊதியக் குழு தற்போதைய விலைவாசி உயர்வு மற்றும் இதர அடிப்படை காரணிகளை ஆராய்ந்து, குறைந்தபட்ச ஊதியமாக ரூ.18,000 என பரிந்துரை செய்ததன் அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு ரூ.18,000 நிர்ணயித்து வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், மாநில அரசின் ஊழியர்களுக்கு குறைந்தபட்ச ஊதியமாக ரூ.15,700 வழங்கப்படுகிறது. அதேபோல் மத்திய அரசு ஊழியர்களின் குறைந்தபட்ச ஓய்வூதியம் ரூ.9,000ஆக உள்ள நிலையில், தமிழக அரசு ஊழியர்களுக்கு ரூ.7,850 வழங்கப்படுகிறது. இது மிகப்பெரிய அநீதியாகும். எனவே, மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போல் குறைந்தபட்ச ஊதியமாக ரூ.18,000 மற்றும் ஓய்வூதியமாக ரூ.9,000 வழங்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## ஒழிக்கப்பட வேண்டிய தொகுப்பூதியம், மதிப்பூதியம் வரையறுக்கப்படாத ஊதிய விகிதங்கள்

கொத்தடிமை கூலி முறையின் கீழ் சத்துணவு மைய அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள், சமூகவனப் பாதுகாவலர்கள், தோட்டக் கலைத்துறை பண்ணை பணியாளர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஊழியர்களின் உழைப்பு முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது. இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மைகளும் இல்லாமல் உழன்று வருகின்றனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

இதேபோல் மத்திய அரசின் திட்டங்களின் கீழ் மாநிலங்களில் அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் நிறுவனங்களிலும் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் நிறுவனங்களிலும் முற்றிலும் ஒப்பந்த முறையில் ஊழியர்கள் நியமிக்கப்பட்டு குறைவான ஊதியத்தில் பணியில் அமர்த்தப்படுகின்ற போக்குகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம், தேசிய பார்வைகுறைபாடு கட்டுப்பாட்டு கழகம், மாநில தொழுநோயாளிகள் கழகம், தேசிய சுகாதாரப் பணி, தேசிய நகர்ப்புற சுகாதாரப்பணி, தமிழ்நாடு சுகாதார மறுசீரமைப்பு திட்டம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணை மற்றும் மூலிகை மருந்து கழகம், நோயாளிகள் நல கழகம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் போன்ற நிறுவனங்களின் சேவைகள் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டு நிறுத்தப்பட்டு விடக் கூடியவை அல்ல.

காலவேக மாற்றத்தில் இத்தகைய நிறுவனங்கள், கழகங்கள், வாரியங்கள் தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் உள்ள நிலையில் அங்கு பணிபுரியும் ஆயிரக்கணக்கான ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்தப்பட்டு பணி செய்வதானது, அரசாங்கமே கொத்தடிமை அத்துக்கூலி முறையையும், உழைப்புச் சுரண்டலையும் அரசுடைமை ஆக்கும் செயலாகும்.

மேற்குறிப்பிடப்பட்ட அரசு சார்புடைய நிறுவனங்கள் போல் புதிதாக துவக்கப்படும் அலுவலகங்களில் அமர்த்தப்படும் பணியாளர்கள், ஒப்பந்த முறையிலான அடிமாட்டு கூலிமுறையில் அமர்த்தப்படும் போக்கானது உடனடியாக கைவிடப்பட்டு ஏற்கெனவே மேற்கண்ட மத்திய மாநில அரசு சார்புடைய நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் அரசு, முறையான ஊதியத்தை நிர்ணயம் செய்து வழங்கவும், தமிழக அரசின் பல்வேறு துறைகளில் தற்காலிகமாக பணியாற்றும் ஊழியர்களை பணி நிரந்தரமாக்க வேண்டும் என்றும் பல போராட்டங்களை முன்நின்று நடத்தியதால் அந்த போராட்டங்களில் உள்ள நியாயத்தை உணர்ந்த மறைந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 19-02-2016ஆம் தேதி தமிழக சட்டப்பேரவையில் விதி 110ன் கீழ் ஒரு அறிக்கை வெளியிட்டார்.

அதில் "ஊதிய விகிதங்களை மாற்றியமைத்தல், தொகுப்பூதியத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களை, காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வருதல், சிறப்பு காலமுறை ஊதியம் வழங்குதல் போன்றவை குறித்து பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன. இக்கோரிக்கைகள் பல்வேறு அரசு அலுவலர்களின் ஊதிய விகிதங்களை ஒப்பிட்டு அவர்களின் hierarchy அதாவது அதிகார நிலை மற்றும் துறைகளின் Parity அதாவது ஒப்புநிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்க வேண்டும். எனவே இத்தகைய கோரிக்கைகளை ஊதியக் குழுவே பரிசீலிக்க இயலும் என்பதால், "இந்த கோரிக்கைகள் அனைத்தும் எதிர்வரும் ஊதியக்குழு மூலம் பரிசீலிக்கப்படும்" என்று தெரிவித்தார். ஆனால் இதுகுறித்து அலுவலர் குழு எதையும் பரிசீலிக்காமலேயே விட்டிருப்பது கண்டிக்கத்தக்கதாகும். இதுகுறித்து அரசிடமும் நீதிமன்றத்திடமும் முறையிட்டு சரிசெய்ய வேண்டிய பொறுப்பு அனைவருக்குமானதாகும்.

சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள் போன்றோருக்கு இளநிலை உதவியாளர் ஊதிய விகிதத்திற்கு இணையாக ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு அதற்கு இணையான புதிய ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பரிசீலிக்கப்படாமல் விடப்பட்டுள்ளது. ஊர்ப்புற நூலகர்களின் ஊதிய விகிதம் அவர்கள் ஆற்றக்கூடிய பணிப்பொறுப்புகள், பணி நேரம் ஆகியவற்றை கருத்தில்கொண்டு தற்போதைய பதிவறை எழுத்தர் பணிநிலைக்கு இணையான புதிய ஊதிய நிர்ணயம் செய்து வழங்கப்படும் என்ற கோரிக்கையும் கண்டுகொள்ளப்படவில்லை.

தமிழகத்தின் சத்துணவு மையங்களிலும் அங்கன்வாடி மையங்களிலும் பணியாற்றி வரக்கூடிய உதவியாளர்களுக்கும், சத்துணவு சமையலர், வருவாய் கிராம உதவியாளர்கள், சமூக வனக் காவலர்கள் ஆகியோருக்கு அவர்தம் பணிப்பொறுப்புகளை கருத்தில் கொண்டு ஊதிய மாற்றத்தின் போது வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் இந்த ஊதிய மாற்றத்தில் பரிசீலிக்காதது கண்டனத்திற்குரியதாகும்.

உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் லட்சக்கணக்கான ஊழியர்களுக்கு மாதாந்திர ஊதியத்தை உத்தரவாதப்படுத்திடும் வகையில், அரசு கருவூலத்தின் மூலம் வழங்கப்பட வேண்டும் எனவும், ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளதைப் போல் அவர்களையும் அரசு ஊழியர்களாக அறிவித்து, அரசு ஊழியர்களுக்கான அனைத்து சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## அரசு ஊழியர் குடியிருப்புகளை பழுது நீக்கிடவும், புதிய குடியிருப்புகளை உருவாக்கிடவும் கோருதல்

தமிழகம் முழுவதும் உள்ள நகரங்களில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டப்பட்டு அரசு ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள குடியிருப்புகள் மிகவும் பழுதடைந்துள்ளதுடன், 20, 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு ஆபத்தான நிலையில் வீடுகள் உள்ளன. எனவே, பழுதடைந்த குடியிருப்புகளை சீர்செய்து செப்பனிடவும், மிகவும் பழுதடைந்த குடியிருப்புகளுக்கு பதிலாக புதிய குடியிருப்புகள் உருவாக்கித் தரவும் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## கருணை அடிப்படையிலான பணி நியமனம் வழங்கிடக் கோருதல்

லட்சக்கணக்கான பணியிடங்கள் காலியாக உள்ள சூழலில், பணியின்போது மரணமடைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு விகிதாச்சார நிபந்தனைகளை தளர்த்தி விண்ணப்பித்துள்ளோர் அனைவருக்கும் பணியிடங்கள் வழங்கிடுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சி பகுதிகளுக்கு மேம்படுத்தப்பட்ட வீட்டு வாடகைப்படி வழங்கிடக் கோருதல்

தமிழகத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்டங்களின் தலைநகரங்களுக்குரிய வீட்டு வாடகைப் படியையும், அதேபோன்று தரம் உயர்த்தப்பட்ட மாநகராட்சி, நகராட்சி பகுதிகளுக்குரிய மேம்படுத்தப்பட்ட வீட்டு வாடகைப் படியையும் வழங்கிடுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## மருத்துவக் காப்பீட்டு திட்டத்தை அரசு ஏற்று நடத்தவும், சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களையும் இத்திட்டத்தில் சேர்த்திடக் கோருதல்

*புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை காப்பீட்டு நிறுவனம் நடத்துவதற்கு பதிலாக தமிழக அரசே ஏற்று நடத்த வேண்டும் எனவும், இத்திட்டத்தில் சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் சமையலர்கள், உதவியாளர்கள் மற்றும் அங்கன்வாடி மைய உதவியாளர்களை சேர்த்திட வேண்டும் என கேட்டுக் கொள்வதுடன், அனைத்து சிகிச்சைகளுக்கும் காப்பீடு கிடைக்கும் வகையில் ஆணையிடவும் வேண்டுமாய் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## பட்டப்படிப்பு முடித்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர்களுக்கு இரண்டு முன் ஊதிய உயர்வு வழங்கக் கோருதல்

*அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் குரூப் 4-ல் தேர்வு செய்யப்பட்டு அரசுத் துறைகளில் பணி நியமனம் செய்யப்படும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கு பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றிருப்பின் இரண்டு ஊதிய உயர்வுகள் ஏற்கனவே வழங்கப்பட்டு தற்போது ரத்து செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து வழங்கிடுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## காலத்திற்கு ஒவ்வாத அரசு ஊழியர் நடத்தை விதிகளை ரத்து செய்ய வலியுறுத்தல்

*அரசு ஊழியர் நடத்தை விதிகள் என்ற பெயரில் அரசு ஊழியர்களை அடிமைகளாக நினைத்து உருவாக்கப்பட்ட, தற்கால சூழலுக்கு முற்றிலும் பொருந்தாத அரசு ஊழியர் நடத்தை விதிகளை ரத்து செய்திட வேண்டுமாய் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## நிர்வாகத் தீர்ப்பாயம் அமைக்கக் கோருதல்

*முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா சட்டமன்ற விதி 110-ன்கீழ் 19.2.2016 அன்று அறிவித்தவாறு நிர்வாக தீர்ப்பாயம் அமைத்திட உடனடி நடவடிக்கையை எடுக்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு அங்கீகாரம் கோருதல்

*கடந்த 34 ஆண்டுகளாக லட்சக்கணக்கான தமிழக அரசு ஊழியர்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்று ஜனநாயக ரீதியாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்கிடுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## குடும்பப் பாதுகாப்புநிதியை ரூ. 10 லட்சமாக உயர்த்தி வழங்கிடக் கோருதல்

*மரணமடையும் அரசு ஊழியர்களின் குடும்பப் பொருளாதார பாதுகாப்பு வேண்டி தற்போது வழங்கப்பட்டு வரும் குடும்பப் பாதுகாப்பு நிதி ரூ. 3 லட்சத்திலிருந்து ரூ. 10 லட்சமாக உயர்த்தி வழங்கிடுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## அரசு குடியிருப்புகளுக்கு பிடித்தம் செய்யும் கூடுதல் வாடகையை ரத்து செய்யக் கோருதல்

அரசு குடியிருப்புகளுக்கு அரசு ஊழியர்களிடமிருந்து வீட்டு வாடகைப் படி பிடித்தம் செய்வதுடன், கூடுதலாக, பெறும் ஊதியத்திலிருந்தும் சதவீத அடிப்படையில் பிடித்தம் செய்யப்படுகிறது. இது தனியார் வாடகை கட்டணத்தைவிட கூடுதலான வாடகை செலுத்தும் நிலை உள்ளது. எனவே, அரசு குடியிருப்புகளுக்கு வீட்டு வாடகைப்படியை மட்டும் பிடித்தம் செய்யக் கோருவதுடன், ஊதியத்தில் சதவீத அடிப்படையில் கூடுதலாக பிடித்தம் செய்வதை ரத்து செய்ய வேண்டுமாய் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## சேலம் - சென்னை 8 வழி பசுமை சாலை திட்டத்தை கைவிடக் கோருதல்

சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மாவட்டத்தை சார்ந்த பொதுமக்கள் மற்றும் விவசாயிகளின் எதிர்ப்புகளை மீறி, விளைநிலங்கள் மற்றும் மலைவளங்களை அழித்திட வகை செய்யும் சேலம் - சென்னை 8 வழி பசுமை சாலை திட்டத்தை கைவிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## நீட் தேர்வை ரத்து செய்யக் கோருதல்

மருத்துவ படிப்புக்கான நீட் தேர்வை மத்திய அரசு புகுத்தியதன் விளைவாக, தமிழக மாணவர்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். திறமையான மாணவர்கள்கூட மருத்துவப் படிப்புக்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அனிதா என்ற மாணவி மற்றும் பிரதீபா ஆகியோர் தங்களது இன்னுயிரை ஈந்துள்ளனர். மேலும், தேர்வில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கேட்கப்பட்ட கேள்விகளின் மொழிபெயர்ப்பால் பல்வேறு குளறுபடிகள் நிகழ்ந்தன.

எனவே, தவறாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகளை அளிக்க வலியுறுத்தி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் டி.கே.ரங்கராஜன் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரித்த நீதிமன்றம் மொழிபெயர்ப்பில் ஏற்பட்ட தவறுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் தலா 196 மதிப்பெண்கள் அளிக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. இதனை எதிர்த்து சிபிஎஸ்இ சார்பில் உச்ச நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டதன் விளைவாக மதுரை கிளை விடுத்த உத்தரவுக்கு தடை விதித்து உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனால் தமிழக மாணவர்களின் மருத்துவக் கல்விக்கு குந்தகம் ஏற்பட்டுள்ளது. ஆகவே, மருத்துவ மாணவ, மாணவிகளை பாதிக்கும் நீட் தேர்வு முறையை கைவிட மத்திய அரசு முன்வர வேண்டும் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## காவிரி பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு

கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய உரிய தண்ணீர் கிடைக்காததால், பல ஆண்டுகளாக டெல்டா பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. காவிரி தீர்ப்பாயம், உச்ச நீதிமன்றம் என பல நிலைகள் தாண்டி, தற்போது காவிரி மேலாண்மை வாரியம் அமைத்து தண்ணீர்

தர வேண்டும் என்று வலியுறுத்தியும், மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க ஒப்புக் கொண்டது. இந்த ஆணையம் அளித்த தீர்ப்பையும் இதுவரை அமுல்படுத்தாமல் கர்நாடக அரசு சதி செய்கிறது. தமிழகத்தில் உள்ள விவசாயிகளுக்கு தீர்வு காணும் வகையில் மத்திய அரசும், உச்ச நீதிமன்றமும் தலையிட்டு தமிழகத்திற்கு உரிய வகையில் கிடைக்க வேண்டிய தண்ணீரை பெற்றுத் தருவதற்கு முன்வருமாறு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## சத்துணவு ஊழியர்களின் பிடித்தம் செய்யப்பட்ட ஊதியத்தை திரும்ப வழங்கக் கோருதல்

கொரோனா வைரஸ் காலத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு முதலமைச்சர் ஆணையிட்டால் குழந்தைகளுக்கு சத்துணவு சமைத்து வழங்க சத்துணவு ஊழியர்கள் தயாராக உள்ளனர் என்பதை தெரிவித்து தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் சார்பில் தமிழக அரசுக்கு முறையீடு அளிக்கப்பட்டது. இக்கோரிக்கையின் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத பட்சத்தில் தமிழக முதல்வரின் கவனத்தை ஈர்த்திடும் வகையில் விடுமுறை தினமான 7.7.2020 அன்று சத்துணவு ஊழியர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஊழியர்களுக்கு ஒரு நாள் ஊதிய பிடித்தம் செய்ய பிறப்பிக்கப்பட்ட உத்தரவை திரும்பப் பெறுமாறு தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## மரணமடையும் அனைத்து தரப்பு அரசு ஊழியர்களுக்கும் ரூ.50 லட்சம் வழங்கிடுக

கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள், செவிலியர்கள், ஆய்வக நுட்புனர்கள், மருந்தாளுனர் மற்றும் பொது சுகாதாரத் துறையில் ஈடுபடும் -ஊழியர்கள் உள்ளிட்ட பிறதுறை ஊழியர்களுக்கும் நோய்த் தொற்று ஏற்பட்டு இறக்கும் தருவாயில் அவர்களுக்கு ரூ.50-லட்சம் வழங்குவதாகவும் அவர்தம் குடும்பத்தில் ஒருவருக்கு தகுதியின் அடிப்படையில் அரசு வேலை வழங்கப்படும் என மாநில அரசு அறிவித்ததை வரவேற்கும் தருணத்தில், இத்தொகை திருச்சி மாவட்டத்தை சேர்ந்த கிராம நிர்வாக அலுவலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் இந்த கொரோனா தொற்று தடுப்புப் பணியில் ஈடுபட்டு உயிரிழந்த ஊழியர்களுக்கு நாளது வரை உரிய நிவாரணத் தொகை வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விழைகின்றோம். கொரோனா நோய்தடுப்பு மற்றும் சிகிச்சை அளிக்கும் பணியில் ஈடுபட்டு மரணமடையும் அனைத்து தரப்பு அரசு ஊழியர்களுக்கும் இந்நிவாரணத் தொகையினை வழங்கிட வேண்டுமென தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## நிறுத்தப்பட்ட அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்படை இரத்து, பொது சேமநல நிதிக்கான வட்டிக் குறைப்பு, முன்ஊக்க ஊதிய உயர்வு இரத்து ஆகியவற்றை இரத்து செய்யக் கோருதல்

கொரானாவினால் ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறையினை காரணம் காட்டி, கொரானா பணியில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்காக பாடுபட்டுவரும் அரசு ஊழியர்களின் அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு ஒப்படை இரத்து, பொது சேமநல நிதிக்கான வட்டிக் குறைப்பு, முன்ஊக்க ஊதிய உயர்வு இரத்து செய்து உத்தரவிட்டுள்ளதை தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டுமென தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்
எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeastatecenter@gmail.com

## பட்டதாரி அல்லாத வருவாய்த்துறை அலுவலர்களின் பதவி உயர்வினை உறுதி செய்திடவும், அவர்கள் ஏற்கனவே பதவி உயர்வு பெற்றுள்ள நிலையில் பணியிறக்கம் செய்வதை தவிர்க்கக் கோருதல்

வருவாய்த்துறையில் அடிப்படைப் பணிகளான இளநிலை வருவாய் ஆய்வாளர், தட்டச்சர் பணியிடங்களுக்கான கல்வித் தகுதி 10ஆம் வகுப்பு தேர்ச்சி ஆகும். தமிழ்நாடு அரசு ஊழியர் தேர்வாணையம் தொகுதி ஐஏ -ன் மூலமும், கருணை அடிப்படையிலும் இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர்களாக பணிநியமனம் பெறும் அலுவலர்கள் 10ஆம் வகுப்பு தேர்ச்சி என்ற தகுதியின் அடிப்படையிலேயே பணிநியமனம் செய்யப்படுகின்றனர். இவர்கள் பணிக்கு வந்த பின் துறைத் தேர்வுகளில் தேர்ச்சி மற்றும் நிலஅளவை, காவல்துறை, நீதித்துறை பயிற்சி பெற்று முதுநிலை வருவாய் ஆய்வாளர், துணை வட்டாட்சியர், வட்டாட்சியர், துணை ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களாகவும் பதவி உயர்வு பெற்று பணியாற்றி வருகிறார்கள்.

இந்நிலையில் வருவாய்த்துறை சார்நிலைப் பணிவிதிகளிலோ (Revenue Subordinate Service Rules), இதர பணியமைப்பு விதிகளிலோ இடம்பெறாத பட்டப்படிப்பு கல்வி தேர்ச்சி பெற வேண்டும் என்பதை காரணம் காட்டி ஏற்கனவே பதவி உயர்வில் சென்ற துணை வட்டாட்சியர், வட்டாட்சியர்களை பணியிறக்கம் செய்யும் நிலை அரசு முதன்மை செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையாஜீன் சுற்றறிக்கையால் தற்போது உருவாகியுள்ளது.

எனவே ஏற்கனவே உள்ள விதிகளின்படியும், துறைத்தேர்வுகள், பயிற்சி பெற்று பதவியுயர்வில் சென்றுவிட்ட பட்டதாரி அல்லாத வருவாய்த்துறை அலுவலர்களை பதவி இறக்கம் செய்யக்கூடாது எனவும் தற்போதுள்ள பதவி உயர்வு பெற்றுள்ள நிலையிலேயே தொடர்ந்து பணியாற்ற அனுமதிக்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## கருணை அடிப்படையிலான பணி நியமனங்களுக்கான பணி வரன்முறையினை உடன் ஆணையிட கோருதல்

தமிழக அரசின் அனைத்து துறைகளிலும் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணிவரன்முறை செய்து உத்தரவிடுவதில் மிகுந்த காலதாமதம் ஏற்படுவதால் அவ்வாறு நியமனம் பெற்ற ஊழியர்களின் பதவிஉயர்வு, வருடாந்திர ஊதிய உயர்வு ஆகியவை பெற முடியாமல் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின்றனர். இவர்களுக்கு பின்பாக பணிக்கு வந்தவர்கள் கூட பதவி உயர்வில் சென்றாலும் இவர்களின் பணிவரன்முறை செய்யப்படவில்லை என்பதற்காக பணிநியமனம் செய்யப்பட்ட அதே பதவியில் நீண்ட காலமாக பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே தமிழக அரசில் அனைத்து துறைகளில் பணிபுரியும் அனைத்து கருணை அடிப்படையிலான பணிநியமனங்களுக்கும் பணிவரன்முறை உத்தரவினை ஒரே அரசாணையில் உடனடியாக வழங்கிட வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## உணவு பாதுகாப்பு அலுவலர்கள் பதவி உயர்வு வழங்க கோருதல்

05.08.2011 முதல் இந்தியா முழுமைக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் உணவு பாதுகாப்பு தர நிர்ணயச் சட்டம் 2006 மற்றும் விதிகள் 2011-ன் படி இதர மாநிலங்களில் செயல்படுத்தப்படுவதுபோல் தமிழ்நாடு அரசு உணவு பாதுகாப்பு துறையிலும், தகுதியுள்ளவர்கள் மட்டுமே நேரடி நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும் மற்றும் உணவு பாதுகாப்பு அலுவலர்களிலிருந்து பதவி உயர்வின் வழியாக மாவட்ட அளவில் நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், இதனை பின்பற்றாமல் மாவட்ட நியமன அலுவலர்களாக தொடர்வோர், அவர்களின் தாய்த்துறைக்கு திரும்ப அனுப்ப வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## ஈரோடு மாவட்டத்தில் உள்ள மலைப்பிரதேச பகுதிகளில் பணிபுரிபவர்களுக்கு மலைப்படி (Hill Allowance) மற்றும் குளிர்காலப்படி (Winter Allowance) வழங்கக் கோருதல்

ஈரோடு மாவட்;டம் தாளவாடி, சத்தியமங்கலம் (கடம்பூர்), அந்தியூர் (பர்கூர்) ஆகிய பகுதிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு மலைப்படி (Hill Allowance) மற்றும் குளிர்காலப்படி (Winter Allowance) வழங்க என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## அம்மா மினி கிளினிக்குகளில் மருந்தாளுநர் பணி நியமனம் கோருதல்

மருத்துவ துறையில் மருந்தாளுநர்களின் பணி என்பது மிகவும் மகத்தான பணி ஆகும். கொரானா தொற்றுக் காலத்தில் மருந்தாளுநர்கள் முன்களப் பணியாளர்களாக நின்று தங்கள் உயிரையும் துச்சமென மதித்து மக்களுக்காக பணிபுரிந்து வருகின்றனர்.

எனவே மருந்தாளுநர்களின் பதவி உயர்வு தேக்கநிலையை போக்கவும், தமிழக அரசு அறிவித்துள்ள 2000 மினி கிளினிக்குகளில் மருந்தாளுநர் பணியிடங்களை உருவாக்கிடவும் வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## கொரானா தொற்று ஏற்பட்டு, சிகிச்சை பெற்ற அரசு ஊழியர்களுக்கு கருணைத் தொகை ரூ.2 இலட்சம் வழங்கக் கோருதல்

தமிழக அரசு அறிவித்துள்ளபடி கொரானா தொற்று ஏற்பட்டு, சிகிச்சை பெற்ற அனைத்து அரசு ஊழியர்களுக்கும் கருணைத் தொகை ரூ.2 இலட்சம் வழங்க வேண்டுமென தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## சுகாதார ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கக் கோருதல்

தமிழக அரசின் பொது சுகாதாரத்துறையில் பயிற்சி முடித்த சுகாதார ஆய்வாளர்களுக்கு உடனடியாக பணிநியமனம் வழங்க வேண்டும் எனவும், ஏழு ஆண்டுகள் ஆகியும் பதவி உயர்வு வழங்கப்படாமல் உள்ள சுகாதார ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாநகராட்சிகளில் கண்காணிப்பாளர், உதவி ஆணையர் பணியிடங்கள் ஏற்படுத்த கோருதல்

*2008 முதல் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட மாநகராட்சிகளுக்கு அதனுடன் இணைக்கப்பட்ட நகராட்சிகளில் ஏற்கனவே இருந்து வந்த இளநிலை உதவியாளர், உதவியாளர் மற்றும் செயல் அலுவலர் பணியிடங்களுக்கு உரிய கண்காணிப்பாளர், உதவி ஆணையர் பணியிடங்களை இதுவரை வழங்கப்படாமல் உள்ளது.*

*எனவே புதிதாக அறிவிக்கப்பட்ட மாநகராட்சிகளில் தேவையான கண்காணிப்பாளர், உதவி ஆணையர் பணியிடங்களை வழங்கி உத்தரவிட வேண்டுமென தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## அரசு மருத்துமனைகளில் உள்ள விழிஒளி பரிசோதகர் (Refractionist) காலிப் பணியிடங்களை நிரப்பிடக் கோருதல்

*தமிழக அரசு மருத்துவமனைகளில் 33 விழிஒளி பரிசோதகர்கள் (Refractionist) பணியிடங்கள் கடந்த 15 ஆண்டுகளாக காலியாக உள்ளன. எனவே உடனடியாக MRB மூலம் தேர்வு செய்து இப்பணியிடங்களை நிரப்ப வேண்டுமென தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## நூலகர்களின் ஊதிய முரண்பாடு களைந்திட கோருதல்

*தமிழக அரசில் பணியாற்றும் அனைத்து நிலை நூலகர்களுக்கும் கருவூலம் மூலம் ஊதியம் வழங்க வேண்டும் எனவும், நூலகர் நிலை 1, 2, 3 ஆகியோருக்கு இதுவரை வழங்கப்படாமல் உள்ள தரஊதியம் ரூ.400/- வழங்கப்படவேண்டும் எனவும், கடந்த 10 ஆண்டுகளாக நிரப்பப்படாமல் உள்ள பொது நூலக இயக்குநர் பணியிடத்தை உடன் நிரப்பிட வேண்டும் எனவும், நூலகர் பணியிடங்களை வருடத்திற்கு ஒருமுறை கலந்தாலாய்வு மூலம் நிரப்பிட வேண்டும் எனவும், பகுதி நேர நூலகர்கள், பகுதி நேர கூட்டுநர்களுக்கு 7வது ஊதியக்குழுவின்படி ஊதியம் நிர்ணயித்து நிலுவைத் தொகை வழங்க வேண்டும் எனவும் 8வது ஊதிய மாற்றத்திற்கான ஊதிய நிர்ணயம் செய்ய வேண்டும் என தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.*

## கண் மருத்துவ உதவியாளர்களுக்கான ஊதிய முரண்பாடுகளை களைந்திட கோருதல்

*மக்கள் நல்வாழ்வுத்துறையில் பொது சுகாதாரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், மருத்துவ கல்வி இயக்ககம் ஆகியவற்றில் கண் மருத்துவ உதவியாளர்களாக 1996 வரை பணியமர்த்தப்பட்டவர்களுக்கும், 1996 க்கு பின் பணியமர்த்தப்பட்டவர்களுக்குமான ஊதியத்தில் முரண்பாடுகள் உள்ளன. பணியில் இளையவர்கள் பணியில் மூத்தவர்களைவிட அதிக ஊதியம் பெறும் நிலை உள்ளது. இதற்கான முறையீடுகள் 'ஊதியக் குழு முரண்பாடு களையும் குழுவிலும்'' கொடுக்கப்பட்டுள்ளது.*

*எனவே பணியில் மூத்தவர்*

களுக்கான பொருளாதார பாதிப்புகளை சரிசெய்து தரவும், கண் மருத்துவ உதவியாளர்களின் காலமுறை பதவி உயர்வினை சம்பளப் பலனுடன் வழங்கப்பட வேண்டும் எனவும் தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

## பேரூராட்சி குடிநீர் திட்ட பணியாளர்கள், மின்பணி உதவியாளர்களுக்கு உயர்த்தப்ட்ட தர ஊதியம் வழங்கிட கோருதல்

பேரூராட்சிகளில் பணிபுரியும் குடிநீர் திட்ட பணியாளர்களுக்கும், மின்பணி உதவியாளர்களுக்கும் வழங்கப்பட்டு வந்த தர ஊதியம் ரூ.1300/-ஐ அரசாணை எண்.338 நிதித்துறை நாள் 26.08.2010 மற்றும் பேரூராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 21256/2012/அ3 நாள்: 10.06.2013-ன் படி ரூ.1900/- என உயர்த்தி ஊதிய நிர்ணயம் செய்து கடந்த 11 வருடங்களாக சுமார் 3000-க்கும் அதிகமான ஊழியர்கள் பெற்று வந்த தர ஊதியத்தினை மீண்டும் வழங்க வேண்டுமென தமிழக அரசை தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் கேட்டுக் கொள்கிறது.

**(மு.அன்பரசு)**
மாநிலத் தலைவர்

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்